
# වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශය
# வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றும்
# ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS

# 2013













## පුනරුත්ථාපන අධිකාරිය
## புனர்வாழ்வு அதிகாரசபை
## REHABILITATION AUTHORITY


අංක.59, ඩී. එස්. සේනානායක මාවත, කොළඹ - 08.
இல.59, டீ. எஸ். சேனாநாயக மாவத்தை, கொழும்பு - 08.
No.59, D. S. Senanayaka Mawatha, Colombo - 08.

# பொருளடக்கம்

1. கையளிப்புக் கடிதம்

2. வருடாந்த அறிக்கை

3. வருடாந்த கணக்குகளின் அறிக்கை

4. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

5. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீதான தலைவரின் அவதானிப்பு

## தூர நோக்கு

புனர்வாழ்வளித்தல் ஊடாக சமூக பொருளாதார மற்றும் சமூக இணக்கப்பாட்டை ஏற்படுத்தல்

## குறிக்கோள்

வன்செயல்கள், குழப்பங்கள், இனக்கலவரங்கள், யுத்தம் மற்றும் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களினது மறுவாழ்வை புனர்வாழ்வினூடாக ஏற்படுத்தி பொருளாதார விருத்தி கண்ட தேசமாக, சமூகமாக ஆவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

# <u>கையளிப்புக் கடிதம்</u>

*கௌரவ. டீ. எம். சுவாமிநாதன் (பா.உ)*
*புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்,*
***புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு,***
*இல. 146, காலி வீதி, கொழும்பு - 03.*

***கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,***

***1971ஆம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 29ம் இலக்க ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் 2013ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதியறிக்கையையும், அதிகாரசபையின் ஆண்டறிக்கையையும் கணக்குகளின் கூற்றையும் பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.***

***உங்கள் உண்மையுள்ள,***

**என்.பத்மநாதன்,**
*தலைவர்,*
*புனர்வாழ்வு அதிகாரசபை.*

ஆட்களையும் ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும்
புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை. (றெப்பியா),

இல. 59, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு - 08.

# ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் (றெப்பியா)

## 2013ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை.

1987ம் ஆண்டின் 29ம் இலக்க புனர்வாழ்வு அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இச்சபை உருவாக்கப்பட்டது.

**2013ம் ஆண்டுக்கான புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை விபரம் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. ஈ.ஏ. சமரசிங்க | - | தலைவர் |
| 2. | திரு. டீ.கே. ஜினதாச | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| 3. | திரு. டி. சிறிதரன் | - | பணிப்பாளர் |
| 4. | ஜனாப். ஏ. சமூன் கலீல் | - | பணிப்பாளர் |
| 5. | திரு. பி. கிறிவத்துடுவ | - | பணிப்பாளர் |

பயங்கரவாத நடவடிக்கைகள் இன வன்செயல்கள், அரசியல் வன்முறைகள் என்பவற்றால் பாதிப்புற்ற ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் நோக்கில் பின்வரும் கடமைகளையும் பொறுப்புக்களையும் இச்சபை கொண்டுள்ளது.

### (அ) அரச சட்டரீதியான பணிகள் (Statutory Functions)

1) பயங்கரவாத செயற்பாடுகளினால் பாதிப்புற்றவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.
2) பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற வீடுகள் சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு உதவியளித்தல்
3) பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற வீடுகள் சொத்துக்களின் குடியிருப்பாளர்களுக்கு உதவியளித்தல்
4) பாதிப்புற்ற சொத்துக்களை இடித்து அழிப்பதற்கும் அதனால் ஏற்படும் சிதைவுகளை அப்புறப்படுத்துவதற்கும் கட்டளையிடல்.
5) பாதிப்புற்ற தொழில்கள், வியாபார முயற்சிகள் என்பனவற்றை கட்டியெழுப்ப உதவுதல்.
6) பாதிப்புற்ற சொத்துக்களை அரசுடமையாக்குதல்.
7) அங்ஙனம் அரசுடமையாக்கப்பட்ட சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களுக்கு அச்சொத்துக்களை மீளக் கையளித்தல்.
8) அரசின் பொறுப்பில் பாரஞ்சாட்டப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் அவற்றின் குடியிருப்பாளர்கள் இடையில் உண்டாகும் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

## (ஆ) ஏனைய பணிகள்

**அ.** ஒருங்கிணைந்த உதவித்திட்டத்தின் (UAS) கீழ் மீள் குடியேற்றக் கொடுப்பனவை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

**ஆ.** பயங்கரவாத வன்செயல் காரணமாக சொத்துக்கள் அழிவுற்றல் அல்லது அவற்றுடன் செயற்பாட்டுள்ளதிற்காக நட்டஈடு வழங்கல்

**இ.** பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகள் 49/89 மற்றும் 21/88 என்பவற்றின் பிரகாரமும் புனர்வாழ்வு அமைச்சின் RR/UAS/MAP/01 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமும் அரச / கூட்டுத்தாபன ஊழியர்கள், அதிமுக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு ஏற்படும்,

**(i)** மரணம்.

**(ii)** காயம்

**(iii)** சொத்தழிவுக்கான நட்டஈடு வழங்குதல்.

**ஈ.** பாதிப்புற்ற அன்றேல் அழிவுற்ற வணக்கஸ்தலங்களைப் புனர்நிர்மாணம் செய்ய உதவியளித்தல்.

**உ.** திருமண சுபீட்சக் கொடுப்பனவு

**ஊ.** தேர்தல் வன்முறையால் பாதிப்புற்றவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.

எ. வீடு, வியாபாரம் மற்றும் கைத்தொழில் புனரமைப்பதற்காக கடன் வழங்கல்

ஏ. பாதிப்புற்ற நபர்கள் / விதவைகளுக்காக சுயதொழில் கடன் திட்டத்தினை அமுல்படுத்தல்

ஐ. யுத்தத்தினால் பாதிப்படைந்த பாடசாலை பிள்ளைகளுக்காக நிவாரணம் வழங்கல்

**ஒ.** சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்.

**ஓ.** வீட்டுக் கடன் திட்டம்.

**ஔ.** சமூகமயப்படுத்தப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்

## (இ) செயற்பாடுகளின் விபரங்கள்.

### *01. ஒருங்கிணைந்த உதவித்திட்டம்*

புனர்வாழ்வு அதிகாரசபையினால் மீள் குடியேற்ற புனர்வாழ்வு உதவி, பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம்" எனும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதனை புனர்வாழ்வு அதிகாரசபையும், இந்த சபைக்குப் பொறுப்பான அமைச்சும் இணைந்து செயற்படுத்துகின்றன. இத்திட்டம் 1983ம் ஆண்டு அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, பின்னர் 1994 மற்றும் 2002ம் ஆண்டுகளிலும் இருமுறை பாதிக்கப்பட்டோருக்கு கூடுதல் நலன்புரி நோக்கில்

திருத்தியமைக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு 06.03.2003ல் இருந்து ஆகக் கூடிய தொகையாக 100,000.00 வழங்கப்படுகின்றது.

<u>நிரந்தர வீடமைப்பு கொடுப்பனவு ரூபா 100,000.00</u>

புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் 2010 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திட்டத்தை சிறப்பாக அமுல்படுத்துவதற்கு மேற்படி கொடுப்பனவானது ரூபா 50,000.00 ஆக இரண்டு தவணைகளில் இடம்பெயர்ந்தவர்களின் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் திருத்தியமைப்பதற்காக வழங்கப்படுகின்றது.

நடப்பாண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 427 குடும்பங்களுக்காக ரூபா 20,000,000.00 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இக்குடும்பங்கள் பிரதானமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது வடகிழக்கு மாகாணங்களில் இருந்தாகும்.

## 2. புனர்வாழ்வு உதவிகள் (நட்டஈடு/நிதியுதவி)

### 2.1 <u>மரணம், காயம் என்பவற்றுக்கான நட்டஈடு வழங்கல்</u>

**(அ) அரச / கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு**

- ***<u>மரணத்திற்கான நட்டஈடு</u>***

  அரச/கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளினால் மரணம் ஏற்படின், அத்தகைய ஊழியர்களில் தங்கியுள்ளோர்/நெருங்கிய உறவினர்களுக்கு ரூபா.200,000.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இது அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல.21/88, 59/89 மற்றும் அதற்குமேலாக மாற்றியமைக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 50 நபர்களுக்காக ரூபா 6,250,000.00 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 08 | 1,150,000.00 |
| 2 | கிளிநொச்சி | 10 | 1,275,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 13 | 1,475,000.00 |
| 4 | மன்னார் | 04 | 425,000.00 |
| 5 | வவுனியா | 05 | 700,000.00 |
| 6 | மட்டக்களப்பு | 04 | 425,000.00 |
| 7 | அம்பாறை | 03 | 450,000.00 |
| 8 | திருகோணமலை | 02 | 300,000.00 |
| 9 | ஏனைய மாவட்டம் | 01 | 50,000.00 |
| | **மொத்தம்** | **50** | **6,250,000.00** |

➢ **காயங்களுக்கான நட்டஈடு**

பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமடையும் அரச / கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு அவர்களுக்கு ஏற்படும் காயத்தினால் ஏற்படும் தொழில் இழப்பின் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் மருத்துவ சான்றிதழின் அடிப்படையில், ஆகக் கூடுதல் தொகையாக ரூபா.100,000.00 நட்டஈடாகப் வழங்கப்படுகின்றது.

அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல.21/88, 59/89 மற்றும் அதற்குமேலாக மாற்றியமைக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 08 நபர்களுக்கு ரூபா.500,000.00 வழங்கப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 02 | 150,000.00 |
| 2 | கிளிநொச்சி | 03 | 150,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 01 | 100,000.00 |
| 4 | மன்னார் | 01 | 50,000.00 |
| 5 | வவுனியா | 01 | 50,000.00 |
| 6 | மட்டக்களப்பு | - | - |
| 7 | அம்பாறை | - | - |
| 8 | திருகோணமலை | - | - |
| 9 | ஏனைய மாவட்டம் | - | - |
| | மொத்தம் | 08 | 500,000.00 |

**(ஆ) அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு**

***(i) மரணத்திற்கான நட்டஈடு***

இந்தத் திட்டத்தின் கீழ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோருக்கு பயங்கரவாத செயற்பாடுகளினால் மரணம் சம்பவிக்கும் பட்சத்தில், அவர்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா.500,000.00 வழங்கப்படுகிறது.

***(ii) காயங்களுக்கான நட்டஈடு***

மேலே (i) இல் குறிப்பிட்டுள்ள பிரமுகர்கள் பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமுற்றிருப்பின் மருத்துவ சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 500,000.00 நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவர்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபருக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

(இ) <u>கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈடு</u>

*(i)* <u>*மரணத்திற்கான / காயங்களுக்கான நட்டஈடு*</u>

பயங்கரவாத வன்செயல், இனக்கலவரம், மக்களிடையே ஏற்படும் மோதல்கள் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளினால் மரணமடையும் பொதுமக்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அதனால் காயமடையும் ஒருவருக்கு இந்நட்டஈட்டுக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

இறப்பிற்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா *100,000.00*
காயத்தற்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா *50,000.00*

மருத்துவ சான்றிதழின் அடிப்படையில் காயத்தினால் ஏற்படும் தொழில் இழப்பின் வீதத்தின் பிரகாரம் நட்டஈடானது தீர்மானிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் *1031* நபர்களுக்கு ரூபா.*88,364,500.00* நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

| இல | மாவட்டம் | இறப்பிற்காக வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) | காயத்திற்காக வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 166 | 16,600,000.00 | 48 | 1,615,000.00 |
| 2 | கிளிநொச்சி | 168 | 16,800,000.00 | 52 | 1,775,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 135 | 13,500,000.00 | 44 | 1,470,000.00 |
| 4 | மன்னார் | 62 | 6,200,000.00 | 13 | 275,000.00 |
| 5 | வவுனியா | 92 | 9,200,000.00 | 05 | 175,000.00 |
| 6 | மட்டக்களப்பு | 90 | 8,725,000.00 | 27 | 567,500.00 |
| 7 | அம்பாறை | 26 | 2,600,000.00 | 03 | 42,500.00 |
| 8 | திருகோணமலை | 60 | 6,000,000.00 | 14 | 314,000.00 |
| 9 | ஏனைய மாவட்டம் | 25 | 2,500,000.00 | 01 | 5,000.00 |
| | மொத்தம் | 824 | 82,125,000.00 | 207 | 6,239,000.00 |

## 2.2 <u>பாதிக்கப்பட்ட / அழிவுற்ற சொத்துக்களுக்கான நட்டஈடு</u>

(அ) <u>அரச / கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு</u>

*1987* ம் ஆண்டு ஜுலை / ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இன வன்முறைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற, நடைபெறும் இத்தகைய

வன்முறைகள் என்பவற்றால் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற அரச / கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக ரூபா.150,000.00 ஐ பெற உரித்துடையோராவார். இது பொது நிர்வாக அமைச்சின் 49/89ம் இலக்க சுற்றுநிருபத்தின் கீழ் வழங்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் 420 நபர்களுக்கு ரூபா.41,761,600.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

**(ஆ) அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு**

மேலே (அ) இல் குறிப்பிட்டுள்ளவாறான வன்முறைகளில் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற/ அழிவுற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், மேலும் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோர் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக முறையே ரூபா. 500,000.00 மற்றும் 150,000.00 உச்ச தொகைக்கு அமைவாக பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 04 நபர்களுக்கு ரூபா.487,500.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

**(இ) பொது மக்களுக்கான நட்டஈடு**

மேலே (அ) மற்றும் (ஆ) இரண்டிலும் குறிப்பிடாத பொது மக்களது சொத்துக்கள், வாகனங்கள் பாதிப்புற்றிருப்பின் / அழிவுற்றிருப்பின், அவற்றுக்கான நட்டஈடாக ரூபா. 100,000.00, அன்றேல் அழிவில் 20% கொடுப்பனவை, பெற்றுக்கொள்ளத் தகுதியுடையோராவார்.

1983ம் ஆண்டு ஜூலைக் கலவரம் மற்றும் அதன்பின்னர் ஏற்பட்ட இழப்புக்களுக்கான நட்டஈடாக இது வழங்கப்பட முடியும். இந்நட்டஈட்டுத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருப்பது 1996.02.16 திகதியிலிருந்தாகும்.

இவ்வருடத்தில் 620 நபர்களுக்கு ரூபா.40,957,085.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

### 2.3 வணக்கஸ்தலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு/ அழிவுகளுக்கான நட்டஈடு

பயங்கரவாத நடவடிக்கையினால் பாதிப்புற்ற அன்றேல் அழிந்த வணக்கஸ்தலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவி இச்சபையினால் வழங்கப்படுகிறது. முற்றாக அழிந்து போன வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.1,000,000.00 உம் மற்றும் பகுதி சேதமுற்ற வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000.00 உம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு வருடத்தில் 116 வணக்கஸ்தலத்துக்கு ரூபா.9,874,064.00 வழங்கப்பட்டது.

## 03 திருமண சுபீட்சக் கொடுப்பனவு

பயங்கரவாத வன்செயல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வன்செயல்களின் காரணமாக அரச நலன்புரி நிலையங்களில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் வாழ்ந்து அல்லது வாழ்ந்திருந்த போது திருமணமான ஒரு நபருக்கு ரூபா. 12,500.00 நிவாரணமாக பெற உரித்துடையவராவர்.

குறைந்த மட்டத்தில் வருமானம் பெறும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிவாரணமானது வழங்கப்படுகின்றது. திருமணமான இருவரும் அரசினால் நடாத்தப்படும் நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களாயின் ரூபா. 25,000.00 கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இந்நிவாரணத்திட்டம் 1995 ம் ஆண்டு ஜுலை மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 04. புனர்வாழ்வுக் கடன் திட்டங்கள்

### (i) கைத்தொழில் கடன்

பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிப்படைந்த பதிவு செய்துள்ள கைத்தொழிலொன்றை புனர்நிர்மாணம் செய்வதற்காக 9% வட்டியுடன் மீளச் செலுத்தும் காலம் 10 வருடங்களின் கீழ் ஒரு கைத்தொழில் நிறுவனத்திற்கு ரூபா ஐந்து 5 மில்லியன் வழங்கப்படுகின்றது. கடன் வழங்குதல் மற்றும் மீளப்பெறல் இலங்கை வங்கியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஒரு கைத்தொழிலுக்காக ரூபா 4,000,000.00 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### *(11)* சுயதொழில் கடன்திட்டம்

பயங்கரவாத வன்செயல், யுத்த சூழ்நிலை மற்றும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் யுத்தத்தின் காரணமாக கணவனை இழந்த விதவைகளுக்கும் நிவாரணம் வழங்கும் பொருட்டு இப்புதிய கடன் திட்டத்திற்கு 2010ம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் மற்றும் ஒரு வருட நிவாரணக் காலத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும். ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது. குறிப்பாக இக்கடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களின் மூலம் காட்டப்படுவது மாவட்டங்கள் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்களின் தொகையாகும்.

| இல | மாவட்டம் | வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 45 | 5,668,000.00 |
| 2 | கிளிநொச்சி | 13 | 1,800,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 20 | 2,215,000.00 |
| 4 | மன்னார் | 12 | 2,450,000.00 |
| 5 | வவுனியா | 44 | 5,600,000.00 |
| 6 | மட்டக்களப்பு | 60 | 9,118,000.00 |
| 7 | அம்பாறை | 96 | 4,175,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 8 | திருகோணமலை | 30 | 4,220,000.00 |
| 9 | ஏனைய மாவட்டம் | 02 | 450,000.00 |
| | **மொத்தம்** | **322** | **35,696,000.00** |

அந்த அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் மொத்தமாக 322 பயனாளிகளுக்கு ரூபா. 35,696,000.00 வழங்கப்பட்டுள்ளது.

### *(111)* வீட்டுத்திட்டக் கடன்

2010ம் ஆண்டில் இக்கடன் திட்டத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனானது பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் ஒரு வருட நிவாரணக் காலத்துடன் ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 14 பயனாளிகளுக்கு ரூபா. 3,300,000.00 வழங்கப்பட்டுள்ளது.

| இல | மாவட்டம் | வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 02 | 450,000.00 |
| 2 | கிளிநொச்சி | 01 | 250,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 03 | 600,000.00 |
| 4 | மன்னார் | 01 | 250,000.00 |
| 5 | வவுனியா | - | - |
| 6 | மட்டக்களப்பு | 03 | 750,000.00 |
| 7 | அம்பாறை | 01 | 250,000.00 |
| 8 | திருகோணமலை | 01 | 250,000.00 |
| 9 | ஏனைய மாவட்டம் | 02 | 500,000.00 |
| | **மொத்தம்** | **14** | **3,300,000.00** |

### புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான அலுல்படுத்தப்படும் சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான அமுல்படுத்தும் சுயதொழில் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012.01.31ம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்திற்காக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் 2012.04.25ம் திகதியில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இக்கடன் திட்டத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு

I. ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 250,000.00 ஆகும்.

II. வருடாந்த வட்டி வீதம் 4% ஆகும்.

III. ஒரு வருட நிவாரணக் காலம்

IV. கடனை மீளப் பெறும் காலம் 10 வருடங்களாகும்.

கடன் வழங்குதல் மற்றும மீளப் பெறல் கீழ் குறிப்பிட்டுள்ள நிதி நிறுவனங்களாகும்.

I. இலங்கை வங்கி

II. மக்கள் வங்கி

III. இலங்கை சேமிப்பு வங்கி

2013ம் ஆண்டில் கடன் வழங்கியுள்ள விபரம் கீழ் வருமாறு:

| இல | மாவட்டம் | வழங்கப்பட்டோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 72 | 12,086,000.00 |
| 2 | கிளிநொச்சி | 87 | 13,589,000.00 |
| 3 | முல்லைத்தீவு | 158 | 29,725,000.00 |
| 4 | மன்னார் | 107 | 20,125,000.00 |
| 5 | வவுனியா | 137 | 21,850,000.00 |
| 6 | மட்டக்களப்பு | 55 | 8,035,000.00 |
| 7 | அம்பாறை | 06 | 1,000,000.00 |
| 8 | திருகோணமலை | 61 | 12,300,000.00 |
| 9 | ஏனைய மாவட்டம் | 04 | 925,000.00 |
| | **மொத்தம்** | **687** | **119,635,000.00** |

**புனர்வாழ்வு அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியு திட்டங்கள்**

(V) **புனரமைக்கப்பட்ட சூழல் நட்புறவுக் கிராமம் அமைத்தல்**

கௌரவ புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்களின் எண்ணக்கருவின் பிரகாரம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் ஒன்றிணைந்த அமைச்சு மற்றும் திணைக்களங்களின் அனுசரணையுடன் இவ்வபிவிருத்தி வேலைத் திட்டங்களானது அமுல்படுத்தப்படுகின்றது.

இங்கு கீழ்மட்ட அபிவிருத்தி குறைந்த கிராமங்களை தேர்தெடுக்கப்படுவதோடு, அம்மக்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகளை உயர்த்துவதற்காக புனர்வாழ்வு அதிகாரசபையினால் முதற்கட்ட நடவடிக்கை மேற்கொள்வதோடு, ஏனைய அபிவிருத்தி தேவைகளுக்கு மற்றும் உட்கட்டமைப்பிற்காக ஒவ்வொரு அமைச்சினதும் மற்றும் திணைக்களங்களினதும் உதவிகள் எதிர்பார்க்கப்பட்டது.

- யுத்தத்தால் பகுதியளவு பாதிப்புற்ற வீடுகளை மீள் அமைப்பதற்காக வவுனியா மாவட்டத்தில் பறைநாட்டக்கல் கிராமத்தில் 80 வீடுகளை புனரமைப்பதற்காக ரூபா 3,975,000.00 வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அங்கு கத்தோலிக்க தேவாலயம் மற்றும் இந்து கோவில்களை புனரமைப்பதற்காகவும் ரூபா இருபது இரண்டு (02) செலவழிக்கப்பட்டுள்ளது.
- யுத்தத்தால் பகுதியளவு பாதிப்புற்ற வீடுகளை மீள் அமைப்பதற்காக அம்பாறை மாவட்டத்தில் மகாஓய சமகிபுர கிராமத்தில் 96 வீடுகளை புனரமைப்பதற்காக ரூபா 4,800,000.00 வழங்கப்பட்டுள்ளது. அங்கு பௌத்த விகாரை புனரமைப்பதற்காக ரூபா 10 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.
- யுத்தத்தால் பகுதியளவு பாதிப்புற்ற வீடுகளை மீள் அமைப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு காந்திநகர் கிராமத்தில் 112 வீடுகளை புனரமைப்பதற்காக ரூபா 5,600,000.00 வழங்கப்பட்டுள்ளது.
- யுத்தத்தால் பகுதியளவு பாதிப்புற்ற வீடுகளை மீள் அமைப்பதற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் பொம்மைவெளி கிராமத்தில் 55 வீடுகளை புனரமைப்பதற்காக ரூபா 2,750,000.00 வழங்கப்பட்டுள்ளது.

**புனர்வாழ்வு அதிகார சபை (றெப்பியா),**

இல.59, டீ.எஸ்.சேனாநாயக்க மாவத்தை,

கொழும்பு- 08.

## 2013.12.31 திகதிக்கான பொது நிறுவனத் துறை நிதி நிலவரம் தொடர்பான விபரம்

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | Rs. Cts. | Rs. Cts. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையிலல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, தளம் மற்றும் உபகரணங்கள் | 1 | 242,757,492.43 | 216,974,057.17 |
| நீண்ட கால முதலீடுகள் | 2 | 868,865,242.00 | 852,502,212.63 |
| | | 1,111,622,734.43 | 1,069,476,269.80 |
| **நடைமுறைச் சொத்து** | | | |
| பொருட்கள் | 3 | 442,442.03 | 377,525.31 |
| பெற்ற கடன் | 4 | 73,437,944.56 | 73,647,007.21 |
| அலுவலர் சபைக் கடன் | 5 | 13,702,815.41 | 14,349,991.18 |
| ஊழியர்களின் சேமலாப முதலீடு | 6 | 5,875,222.01 | 4,832,555.00 |
| முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய வருமதிகள் | 7 | 50,803,077.06 | 119,846,411.22 |
| காசு மற்றும் காசுப்பாய்ச்சல் | 8 | 16,728,294.32 | 34,415,934.67 |
| | | 160,989,795.39 | 247,469,424.59 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,272,612,529.82** | **1,316,945,694.39** |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறையிலில்லாத பொறுப்புக்கள் | 9 | 738,994,380.00 | 764,844,380.00 |
| **முன்னைய மற்றும் ஏனைய பொறுப்புக்கள்** | | **738,994,380.00** | **764,844,380.00** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 10 | 2,296,494.97 | 3,352,715.67 |
| | | **2,296,494.97** | **3,352,715.67** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **741,290,874.97** | **768,197,095.67** |
| **தேறிய சொத்து** | | **531,321,654.85** | **548,748,598.72** |
| **தேறிய சொத்துப் பங்கு** | 11 | | |
| அரச மானியம் | | 218,996,000.00 | 198,996,000.00 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 6,530,642.30 | 5,738,374.50 |
| திரட்டப்பட்ட மிகை | | 296,446,615.17 | 335,991,299.62 |
| ஒய்வூதிய வரப்பிரசாதம் | | 9,348,397.38 | 8,022,924.60 |
| **மொத்த பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | **531,321,654.85** | **548,748,598.72** |

| ............................... | ............................... | ............................... |
|---|---|---|
| ஈ.ஏ.சமரசிங்க | எஸ்.என்.சீ.டபிள்யூ.எம்.தர்மகீர்த்தி | ஜீ.எஸ்.விதானகே |
| (தலைவர்) | (A: உதவிப் பணிப்பாளர் நிதி | |

(செயலாளர்) புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

## 2013.12.31 திகதிக்கான பொது நிறுவனத் துறை நிதி நிலவரம் தொடர்பான விபரம்

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா . சதம் | ரூபா . சதம் |
| வருமானம் | | | |
| மீள்நடைமுறை மானியம் | 1 | 237,029,000.00 | 86,451,000.00 |
| வட்டி | 2 | 13,948,205.53 | 12,468,160.77 |
| ஏனைய வருமானம் | | 17,625.00 | 14,400.00 |
| பற்றாக்குறைக்காக அழிக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனை | | (71,853.21) | - |
| **மொத்த வருமானம்** | | **250,922,977.32** | **98,933,560.77** |
| **செலவுகள்** | | | |
| ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன் | 3 | 26,663,773.22 | 26,683,183.15 |
| மானியம் மற்றும் ஏனைய மாறுதல் கொடுப்பனவு | 4 | 193,893,757.99 | 53,729,516.00 |
| விநியோகம் மற்றும் நுகர்வோர் | 5 | 3,539,902.33 | 3,268,005.28 |
| மதிப்பிறக்கம் / தேய்மானம் | 6 | 3,718,248.24 | 2,568,523.01 |
| நிலையான சொத்துக்களை பராமரித்தல் | 7 | 2,639,710.10 | 2,125,444.51 |
| ஏனைய செலவினங்கள் | 8 | - | 11,782,979.78 |
| நிதி பெறுமதி | 9 | - | 58,925.00 |
| **மொத்த செலவினம்** | | **230,455,391.88** | **100,216,576.73** |
| **மிகை/உரிய காலத்தின் பற்றாக்குறை** | | **20,467,585.44** | **(1,283,015.96)** |

## ஆட்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை

## 2013 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் அறிக்கை

| விபரம் | குறிப்பு | 2013 ( ரூபா) |
|---|---|---|
| **இயங்கிவரும் நடவடிக்கையின் நிதிப்பாய்ச்சல்** | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற கட்டுநிதி | | 237,029,000.00 |
| நானாவித செலவினம் | | 64,500.00 |
| தண்டக் கட்டணம் | | 1,286,609.92 |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | A | (237,692,013.44) |
| நிரந்தர வீடமைப்பு நிவாரணம் | | (20,000,000.00) |
| **இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப்பாய்ச்சல்** | | **(19,311,903.52)** |
| **முதலீட்டு நடவடிக்கையின் நிதிப் பாய்ச்சல்** | | |
| வட்டி | B | 12,564,629.56 |
| கடன் மீளப் பெறல் | C | 3,213,243.73 |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | D | (5,467,116.50) |
| தொகுக்கப்பட்ட செலவினம் | | (966,157.17) |
| முத்ர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல் | | 139,125,970.63 |
| முதலீடுகள் | E | (166,846,307.08) |
| **இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப்பாய்ச்சல்** | | **(18,375,736.83)** |
| **நிதி நடவடிக்கையின் நிதிச் சுற்றோட்டம்** | | **20,000,000.00** |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியம் | | 20,000,000.00 |
| **நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | | **(17,687,640.35)** |
| **வருட ஆரம்பத்தின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | F | **34,415,934.67** |
| **வுருட இறுதியின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | G | **16,728,294.32** |

***கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும்.***

***அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டவை கழித்தலாகக் காட்டப்படல் வேண்டும்.***

## 2013 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான நிதி தொடர்பான அறிக்கை

| 2012 (ரூபா) | குறிப்பு | | 2013 (ரூபா) |
|---|---|---|---|
| | | **சொத்துக்கள்** | |
| **216,974,057.17** | **1** | **சொத்துக்கள், தொழிற்கூடம் மற்றும் உபகரணம்** | **242,757,492.43** |
| | | **கிரயம்** | |
| 25,189,552.85 | | வருட ஆரம்ப திகதி பெறுமதி | 26,371,050.30 |
| - | | ஜெர்னல் குறிப்பு இல.12 | 4,950,000.00 |
| - | | வருடத்தில் நீக்கப்பட்டவை ( நீக்கப்பட்ட சொத்துக்களின் கொள்விலை) | 1,089,939.50 |
| - | | வருடத்தில் மீள்மதீப்பீடு செய்தவை (மீள்மதீப்பீடு செய்த சொத்துக்களின் கொள்விலை) | 13,006,880.80 |
| 1,181,497.45 | | வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 5,549,616.50 |
| - | | கூட்டல் - மீள்மதீப்பீடு செய்த சொத்துக்களின் பெறுமதி | 4,042,999.47 |
| **26,371,050.30** | | | **26,816,845.97** |
| | | **தேய்மானம்** | |
| 15,341,555.12 | | வருட ஆரம்ப திகதி பெறுமதி | 18,260,078.13 |
| - | | நீக்கப்பட்ட சொத்துக்களின் தேய்மானத் தொகை | 971,211.29 |
| - | | மதீப்பீடு செய்த சொத்துக்களின் தேய்மானத் தொகை | 9,756,149.13 |
| 3,718,248.23 | | கூட்டல் - வருடத்திற்கான கட்டணம் | 3,718,248.23 |
| 350,000.00 | | ஜெர்னல் குறிப்பு இல.12 | 1,671,472.60 |
| - | | கழித்தல் - உரிய வருடத்தில் மாற்றியவை | - |
| **18,260,078.13** | | வருட இறுதி மொத்தப் பெறுமதி | **12,922,438.54** |
| | | **தேறிய புத்தகப் பெறுமதி** | |
| **8,110,972.17** | | வருட இறுதி மொத்தப் பெறுமதி | **13,894,407.43** |
| | | *(விபரத்திற்காக குறிப்பு இல.12-1 பார்க்கவும்)* | |
| 208,863,085.00 | | *வீட்டு புனரமைப்பிற்கான மூலதன மானியம்* | 228,863,085.00 |
| **852,502,212.63** | **2** | **நீண்ட கால முதலீடுகள்** | **868,865,242.00** |
| 852,502,212.63 | | ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட முதலீடு | 868,865,242.00 |
| | | *(விபரத்திற்காக குறிப்பு இல.13-1 பார்க்கவும்)* | |
| **377,525.31** | **3** | **சரக்கு** | **442,442.03** |
| 377525.31 | | கையிருப்பு (காகிதாகிகள்) | 442,442.03 |
| **73,647,007.21** | **4** | **கடன் மீளப்பெறல்** | **73,437,944.56** |
| 4,681,213.68 | | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் வர்த்தகக் கடன் | 4,472,151.03 |
| 67,341,609.58 | | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் அசையும் சொத்துக்களுக்கான கடன் | 67,341,609.58 |

| | | | |
|---|---|---|---|
| (6,736,352.14) | | அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கல் | (6,736,352.14) |
| 9,289,484.54 | | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் சுயதொழில் கடன் | 9,289,484.54 |
| (928,948.45) | | அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கல் | (928,948.45) |
| **14,349,991.18** | **5** | **அலுவலர் சபைக் கடன்** | **13,702,815.41** |
| 9,277,091.74 | | சொத்துக் கடன் | 8,722,048.26 |
| 4,938,404.53 | | அலுவலர் சபைக் கடன் (அனர்த்தம்) | 4,880,524.70 |
| 45,494.91 | | அனர்த்தக் கடன் | - |
| 89,000.00 | | பண்டிகைக் கால முற்பணம் | 100,242.45 |
| **4,832,555.00** | **6** | **ஊழியர் சேமலாப முதலீடு** | **5,875,222.01** |
| 4,832,555.00 | | ஊழியர் சேமலாப முதலீடு | 5,875,222.01 |
| **119,846,411.22** | **7** | **முற்பணம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள்** | **50,803,077.06** |
| 43,870,837.96 | | கடன் வழங்கும் நிறுவனங்களினால் கிடைக்கப் பெற்ற வட்டி | 44,911,247.51 |
| 557,348.66 | | சேமலாப முதலீட்டுக்கான வட்டி | 415,196.84 |
| 239,612.06 | | கிடைக்க வேண்டிய வருமதிகள் | 208,538.56 |
| 347,921.48 | | முன்னைய கொடுப்பனவுகள் | 254,801.48 |
| - | | பெற வேண்டிய சம்பளம் | 28,292.67 |
| 910,000.00 | | மீளச் செலுத்த வேண்டிய வைப்பு | 4,985,000.00 |
| 73,920,691.06 | | திறைசேரி வைப்பு | - |
| **34,415,934.67** | **8** | **காசு மற்றும் காசுக்கு நிகரான** | **16,728,294.32** |
| 34,311,551.95 | | இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை கணக்கு இல. 2026495 | 869,378.32 |
| 104,382.72 | | இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை கணக்கு இல. 2026496 | 313,445.37 |
| - | | இலங்கை வங்கி - மெட்ரோபொலிடன் கிளை கணக்கு இல. 74757297 | 15,545,470.63 |
| **1,316,945,694.39** | | **முழுச் சொத்து** | **1,272,612,529.82** |
| **764,844,380.00** | **9** | **ஒதுக்கல் மற்றும் ஏனைய வைப்பு** | **738,994,380.00** |
| 738,544,380.00 | | ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட முதலீடு | 738,544,380.00 |
| 450,000.00 | | கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கம் | 450,000.00 |
| **3,352,715.67** | **10** | **ஏனைய கொடுப்பனவுகள்** | **2,296,494.97** |
| 966,157.17 | | தொகுக்கப்பட்ட செலவினம் | 1,565,023.67 |
| 2,386,558.50 | | வைப்புக் கணக்கு | 731,471.30 |
| **768,197,095.67** | | **மொத்த பொறுப்புக்கள்** | **741,290,874.97** |
| **548,748,598.72** | | **தேறிய சொத்துக்கள்** | **531,321,654.85** |

## 2013.12.31 ஆண்டிறுதிக்கான நிதி முன்னேற்ற அறிக்கை தொடர்பான விபரம்

| 2012 (Rs.) | குறிப்பு | | 2013 (Rs.) |
|---|---|---|---|
| | | வருமானம் | |
| 86,451,000.00 | 1 | அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற வருமதிகள் | 237,029,000.00 |
| | | திறைசேரியின் கட்டுநிதி - மூலதனம் | |
| 86,451,000.00 | | திறைசேரியின் கட்டுநிதி - மூலதனம் | 237,029,000.00 |
| | | அமைச்சின் கட்டுநிதி - மூலதனம் | |
| | | அமைச்சின் கட்டுநிதி - மூலதனம் | |
| 12,468,160.77 | 2 | வட்டி | 13,948,205.53 |
| | | அரச ஈட்டு முதலீட்டு வங்கியிடமிருந்து ஆர்சீ மற்றும் ஆர்4, ஆர்சீ மற்றும் ஆர்8 கடன்களின் 3மூ வட்டி | |
| | | வழங்கப்படாத கடன் - அரச ஈட்டு முதலீட்டு வங்கி | |
| | | *நிதி நிறுவனங்களின் முதலீடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டி* | |
| 1,225,000.00 | | இலங்கை வங்கி | 1,247,123.29 |
| 3,500,535.63 | | மக்கள் வங்கி | 1,956,978.08 |
| 377,742.23 | | வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 306,181.55 |
| 75,000.00 | | ஹற்றன் நெஷனல் வங்கி | 24,041.10 |
| 200,000.00 | | புதிய அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முதலீடு | 200,000.00 |
| 1,869,045.00 | | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,857,534.08 |
| 4,050,162.07 | | இலங்கை வங்கி புதிய கடன் திட்டம் | 4,856,032.44 |
| 361,151.58 | | சேமலாப முதலீட்டின் வட்டி | 401,241.19 |
| | | *அலுவலர் சபை கடனுக்கான வட்டி* | |
| 532,952.14 | | சொத்துக் கடன் | 459,844.05 |
| 244,552.52 | | அனர்த்தக் கடன் | 209,091.59 |
| 2,019.60 | | விஷேட முற்பணம் | 2,689.74 |
| | | சேமிப்புக் கணக்கு | 2,427,448.42 |
| 14,400.00 | | | 17,625.00 |
| 14,400.00 | | ஏனைய வருமானம் | 17,625.00 |
| | | | (71,853.21) |
| | | நீக்கப்பட்ட சொத்துக்களின் பற்றாக்குறை விற்பனையும் | (71,853.21) |
| 98,933,560.77 | | மொத்த வருமானம் | 250,922,977.32 |
| | | செலவினம் | |
| 26,683,183.15 | 3 | ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன் | 26,663,773.22 |
| 12,109,012.03 | | அலுவலர் சபை சம்பளம் | 12,786,075.79 |

| | | |
|---|---|---|
| 2,215,524.42 | ஊழியர் நன்கொடை நிதியம் | 2,450,236.87 |
| 553,881.08 | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 612,559.21 |
| | ஓய்வூதிய நிதியம் | - |
| 740,237.89 | மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கால கொடுப்பனவு | 506,141.25 |
| 3,948,262.50 | வாழ்வாதாரக் கொடுப்பனவு | 4,679,224.00 |
| 600,000.00 | தலைவருக்கான படிகள் | 600,000.00 |
| 460,000.00 | செயற்பாட்டுப் பணிப்பாளருக்கான படிகள் | 480,000.00 |
| 52,000.00 | பணிபப்பாளர் சபையினருக்கான படிகள் | 80,000.00 |
| | கணக்காய்வு முகாமைத்துவ கமிட்டி கூட்டத்திற்கான படிகள் | 64,000.00 |
| 48,000.00 | பணிபப்பாளர் சபையின் செயலாளருக்கான படிகள் | 48,000.00 |
| 1,592.10 | இரண்டாந்தர படிகள் | - |
| 1,755,807.97 | விஷேட கொடுப்பனவுகள் | 2,202,459.65 |
| | இடைக்கால கொடுப்பனவுகள் | - |
| 753,769.33 | ஏனைய கொடுப்பனவுகள் | 710,932.70 |
| 95,152.80 | மொழித்திறன் கொடுப்பனவு | 96,739.73 |
| 3,349,943.03 | சேமலாப செலவினம் | 1,347,404.02 |
| | | |
| **53,729,516.00** | **4 மானியம் மற்றும் ஏனைய மாற்றீடு கொடுப்பனவு** | **193,893,757.99** |
| | *இறப்பு காயத்திற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு* | |
| 3,450,000.00 | அரச ஊழியர் | 6,750,000.00 |
| 23,227,500.00 | பொது மக்கள் | 88,264,000.00 |
| - | கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்கள் | - |
| - | தேர்தல் வன்செயல் காரணமாக பாதிப்புற்றோர் | - |
| - | விஷேட தரத்தினர் | - |
| | பாதிப்படைந்த சொத்திற்கான நட்டஈடு வழங்கல் | |
| 13,448,279.00 | அரச ஊழியர் | |
| 13,378,737.00 | பொது மக்கள் | 41,761,645.00 |
| 200,000.00 | வணக்கஸ்தலததிற்கான நட்டஈடு | 40,957,085.00 |
| | கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்கள் | 10,361,564.00 |
| - | தேர்தல் வன்செயல் காரணமாக பாதிப்புற்றோர் | - |
| - | விஷேட தரத்தினர் | - |
| 25,000.00 | வாழ்வாதாரக் கொடுப்பனவு | - |
| - | கடன் மேற்பார்வை நிகழ்ச்சி | 1,529,951.99 |
| - | சுயதொழில் பயிற்சி வழங்கல் | 739,228.80 |
| - | நட்டஈடு | 3,530,283.20 |
| | | |
| **3,268,005.28** | **5 விநியோகம் மற்றும் நுகர்வோர் பாவனை** | **3,539,902.33** |
| 952,567.72 | காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 1,037,592.78 |
| 2,139,809.56 | மசகு மறறும் எரிபொருள் | 2,310,194.55 |
| 67,928.00 | சீருடைகள் | 79,380.00 |
| 107,700.00 | புதினப்பத்தரிகை மற்றும் சஞ்சிகைகள் | 112,735.00 |

| | | |
|---|---|---|
| 2,568,523.01 | 6 தேய்மானம் | 3,718,248.24 |
| 1,562,633.00 | மோட்டார் வாகனங்களுக்கான தேய்மானம் | 2,787,293.84 |
| 270,548.66 | தளபாடம், அலுவலக உபகரணம் மற்றும் பொருத்துதிகளுக்கான தேய்மானம் | 141,400.09 |
| 116,196.00 | அறைகளாகப் பிரித்தலுக்கான தேய்மானம் | 116,196.00 |
| 36,170.84 | தொலைபேசிக்கான தேய்மானம் | 5,632.30 |
| 193,228.00 | கருவிகளுக்கான தேய்மானம் | 198,676.55 |
| 312,134.90 | கணனிகளுக்கான தேய்மானம் | 258,290.58 |
| 77,611.61 | குளிரூட்டிகளுக்கான தேய்மானம் | 210,758.88 |
| 2,125,444.51 | 7 நிலையான சொத்துக்களை பராமரித்தல் | 2,639,710.10 |
| 488,130.04 | நிலையான சொத்துக்களை பராமரித்தலும் புதுப்பித்தலும் | 900,804.33 |
| 1,637,314.47 | வாகனங்களை பராமரித்தலும் புதுப்பித்தலும் | 1,682,406.77 |
| | கட்டிட பராமரித்தல் செலவினம் | 56,499.00 |
| 11,782,979.78 | 8 ஏனைய செலவினங்கள் | 12,832,277.70 |
| 180,999.50 | பிரயாணச் செலவினம் - உள்ளூர் | 195,462.68 |
| | பிரயாணச் செலவினம் - வெளியூர் | 53,600.00 |
| 487,634.00 | தொலைபேசிக் கட்டணம் | 475,711.31 |
| 376,297.00 | தபால் கட்டணம் | 465,903.00 |
| 1,001,268.48 | மின்சாரம் மற்றும் ஏனைய செலவினம் | 1,002,031.96 |
| 5,100,000.00 | வாடகை | 5,528,400.00 |
| 1,114,731.60 | வாகனங்களுக்கான வாடகைச் செலவினம் | 1,170,000.00 |
| 594,892.80 | அச்சிடல் கட்டணம் | 731,836.00 |
| 1,137,042.95 | விருந்தோம்பல் கட்டணம் | 205,761.41 |
| 150,000.00 | கணக்காய்வுக் கட்டணம் | 150,000.00 |
| 145,134.50 | கருத்தரங்கு மற்றும் கூட்ட அமர்வு | 151,500.00 |
| 447,176.40 | ஊழியர்களின் வைத்தியக் காப்புறுதி | 434,612.04 |
| 997,901.75 | நானாவித செலவினம் | 1,019,615.93 |
| 49,900.80 | நலன்புரிச் சங்கம் | 320,404.45 |
| - | நடமாடும் வைபவ நிகழ்வு | 602,438.92 |
| - | நிதிக் கட்டணம் | 325,000.00 |
| 58,925.00 | 9 நிதிக் கிரயம் | 216,980.58 |
| | வங்கிக் கட்டணம் - WHT 10% | 216,980.58 |
| 20,000.00 | வரிக் கட்டணத்திற்கான வட்டி | |
| 38,925.00 | தேசிய அபிவிருத்தி வங்கியின் வட்டி | |
| 100,216,576.73 | மொத்த செலவினம் | 243,504,650.16 |
| (1,283,015.96) | உரிய காலத்தின் மிகை/பற்றாக்குறை | 7,418,327.16 |

## காசுப்பாய்ச்சல் அறிக்கைக்கான நிதிக்குறிப்பு

| | | 2013 ( Rs ) |
|---|---|---|
| A | ஏனைய மீண்டுவரும் செலவினம் | (237,692,013.44) |
| | தனிப்பட்ட ஊதியம் | (25,359,981.33) |
| | பிரயாணம் | (507,746.00) |
| | வழங்குதல் | (3,592,169.05) |
| | மேற்பார்வை | (2,545,724.42) |
| | ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் | (10,838,414.73) |
| | இறப்பு/காயத்திற்கான நட்டஈடு | (4,449,777.12) |
| | பாதிப்படைந்த சொத்துக்களுக்கான நட்டஈடு | (95,114,000.00) |
| | | (95,284,200.79) |
| B | வட்டி | 12,564,629.56 |
| | 2013ம் வருடத்திற்கான நிதி நிறுவனங்களிலிருந்து கிடைத்த வட்டி | 9,407,480.99 |
| | கடன் திட்டங்களிலிருந்து கிடைத்த வட்டி | |
| | அலுவலர் சபையின் கடனுக்கான வட்டி | 209,091.59 |
| | சொத்துக்கள் கடனுக்கான வட்டி | 459,844.05 |
| | விஷேட கொடுப்பனவுகளுக்கான வட்டி | 2,689.74 |
| | சேமலாப முதலீட்டிற்கான வட்டி | 58,074.77 |
| | சேமிப்புக் கணக்கிற்கான வட்டி | 2,427,448.42 |
| C | கடன் மீளப்பெறல் | 3,213,243.73 |
| | இலங்கை வங்கியின் ரூபா 200,000.00 கடன் | 209,062.65 |
| | பண்டிகைக் கால முற்பணம் | 233,257.55 |
| | அலுவலர் சபைக் கடன் | 1,014,104.56 |
| | சொத்துக் கடன் | 555,043.48 |
| | விஷேட முற்பணம் | 75,000.00 |
| | அனர்த்த முற்பணம் | 45,495.18 |
| | வைப்புக் கணக்கு | 872,180.16 |
| | மீளப் பெற்றவை | 188,283.63 |
| | முன்னைய வருட வருமானம் | 20,816.52 |

| | | |
|---|---|---|
| **D** | **நிலையான சொத்துக்களின் கையகப்படுத்தல்** | **(5,467,116.50)** |
| | தளபாடம், அலுவலக உபகரணம் மற்றும் பொருத்துதிகள் | (1,595,408.50) |
| | தொலைபேசி | (120,150.00) |
| | கணனிகள் | (1,106,250.00) |
| | குளிரூட்டிகள் | (953,128.00) |
| | அறைகளாகப் பிரித்தல் | (1,692,180.00) |
| **E** | **முதலீடுகள்** | **(166,846,307.08)** |
| | சேமலாப முதலீடு | (557,348.77) |
| | பண்டிகைக் கால முற்பணம் | (245,000.00) |
| | அலுவலர் சபை கடன் | (956,225.00) |
| | விஷேட முற்பணம் | (75,000.00) |
| | நானாவித வைப்பு | (2,527,267.36) |
| | முன்னைய கொடுப்பனவுகள் | (254,801.48) |
| | மீள் நிதி வைப்பு | (4,500,000.00) |
| | முன்னைய வருட செலவினம் | (2,241,664.47) |
| | இலங்கை வங்கியின கைத்தொழில் கடன் திட்டம் | (10,000,000.00) |
| | இலங்கை வங்கியின் புதிய கடன் திட்டம் | (145,489,000.00) |
| **F** | | **34,415,934.67** |
| | இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல.02026495 | 34,311,551.95 |
| | இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல.02026496 | 104,382.72 |
| | இலங்கை வங்கி - சேமிப்புக் கணக்கு இல.74757297 | |
| **G** | | **16,728,294.32** |
| | இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல.02026495 | 869,378.32 |
| | இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல.02026496 | 313,445.37 |
| | இலங்கை வங்கி - சேமிப்புக் கணக்கு இல.74757297 | 15,545,470.63 |

## புனர்வாழ்வு அதிகாரசபையின் ஒதுக்கம் மற்றும் பங்கு தொடர்பான கூற்று
## 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் தேறிய சொத்து / பங்கு

குறிப்பு - 11

| | திரட்டப்பட்ட நிதி | சேமநல ஒதுக்கீடு | அரசின் மூலதன மானியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2013.01.01 இன் மீதி | 335,991,299.62 | 8,022,924.60 | 198,996,000.00 | 5,738,374.50 | 548,748,598.72 |
| | | | | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | | 792,267.80 | 792,267.80 |
| இவ்வருடத்திற்கான ஒதுக்கம் (தேறிய) | | 1,325,472.78 | 20,000,000.00 | | 21,325,472.78 |
| முன்னைய வருட செலவினம் | (51,933,828.13) | | | | (51,933,828.13) |
| முன்னைய வருட வருமானம் | 4,970,816.52 | | | | 4,970,816.52 |
| **தேறிய மிகை/வருட பற்றாக்குறை** | 7,418,327.16 | | | | 7,418,327.16 |
| **2013.12.31 இன் மீதி** | **296,446,615.17** | **9,348,397.38** | **218,996,000.00** | **6,530,642.30** | **531,321,654.85** |

**2013.12.31 திகதியில் முடிவடைந்த ஒன்றிணைந்த நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முதலீடு**

| நிறுவனம் | பேரேட்டுப் பக்கம் | வீட்டுக் கடன் | வியாபாரக் கடன் | கைத்தொழில் கடன் | சுயதொழில் கடன் | புதிய வீடமைப்புக் கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 38, 50 | 9,500,000.00 | 2,500,000.00 | 31,000,000.00 | 537,987,000.00 | 70,991,000.00 | 651,978,000.00 |
| மக்கள் வங்கி | 41 | 67,200,000.00 | | | | | 67,200,000.00 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 49 | 123,213,000.00 | | | | | 123,213,000.00 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 47 | 16,474,242.00 | | | | | 16,474,242.00 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 45 | 10,000,000.00 | | | | | 10,000,000.00 |
| **மொத்தம்** | | 226,387,242.00 | 2,500,000.00 | 31,000,000.00 | 537,987,000.00 | 70,991,000.00 | **868,865,242.00** |

குறிப்பு இல.13 -2

**2013.12.31இல் நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் வட்டி**

| நிறுவனம் | பேரேட்டுப் பக்கம் | மொத்தம் ரூபா |
|---|---|---|
| இலங்கை வங்கி | 22 | 1,247,123.29 |
| மக்கள் வங்கி | 24 | 1,956,978.08 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 33 | 36,366,579.08 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 31 | 306,263.74 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 28 | 178,270.84 |
| இலங்கை வங்கியின் புதிய கடன் திட்டம் | 36 | 4,856,032.48 |
| **மொத்தம்** | | **44,911,247.51** |

# 2013

## நடைமுறையிலல்லாத சொத்துக்கள்

குறிப்பு இல.12-1

| | மோட்டார் வாகனம் | தளபாடம், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் | பொறிகள் | தொலைபேசி | அறைகளாகப் பிரித்தல் | கணனிகள் | குளிரூட்டிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ***கிரயம்*** | | | | | | | | |
| **01.01.2013 காசு மீதி** | 10,751,570.00 | 6,488,962.37 | 1,560,224.50 | 868,631.51 | 1,522,660.00 | 2,133,781.59 | 3,045,220.33 | 26,371,050.30 |
| ***ஜெர்னல் குறிப்பு இல. 12*** | 4,950,000.00 | | - | | | | | 4,950,000.00 |
| வருடத்தினுள் நீக்கப்பட்டவை | - | 304,229.50 | 14,175.00 | 7,660.00 | - | 471,675.00 | 292,200.00 | 1,089,939.50 |
| மீள்மதிப்பீடு செய்த சொத்துக்களின் பெறுமதி | - | 6,184,732.87 | 1,546,049.50 | 860,971.51 | - | 1,662,106.59 | 2,753,020.33 | 13,006,880.80 |
| மீள்மதிப்பீடு செய்த சொத்துக்களின் பெறுமதி | - | 1,405,618.77 | 794,706.20 | 56,323.00 | - | 943,316.00 | 843,035.50 | 4,042,999.47 |
| வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை | - | 1,595,408.50 | - | 120,150.00 | 1,692,180.00 | 1,188,750.00 | 953,128.00 | 5,549,616.50 |
| **31.12.2013 இன் மீதி** | 15,701,570.00 | 3,001,027.27 | 794,706.20 | 176,473.00 | 3,214,840.00 | 2,132,066.00 | 1,796,163.50 | 26,816,845.97 |
| ***தேய்மானம்*** | | | | | | | | |
| **01.01.2013 காசு மீதி** | 6,471,949.09 | 4,779,844.00 | 1,254,529.08 | 745,528.56 | 1,060,768.62 | 1,494,053.34 | 2,453,405.44 | 18,260,078.13 |
| நீக்கப்பட்டதன் தேய்மானத் தொகை | - | 203,640.10 | 14,175.00 | 5,109.68 | - | 456,085.51 | 292,200.00 | 971,210.29 |
| | 6,471,949.09 | 4,576,203.90 | 1,240,354.08 | 740,418.88 | 1,060,768.62 | 1,037,967.83 | 2,161,205.44 | 17,288,867.84 |
| மீள்மதிப்பீடு செய்த சொத்துக்களின் தேய்மானம் | - | 4,576,203.90 | 1,240,354.08 | 740,418.88 | - | 1,037,967.83 | 2,161,205.44 | 9,756,150.13 |
| ***ஜெர்னல் குறிப்பு இல. 13*** | 1,671,472.60 | | | | | | | 1,671,472.60 |
| வருடத்திற்கான ஒதுக்கம் | 2,787,293.84 | 141,400.09 | 198,676.55 | 5,632.30 | 116,196.00 | 258,290.58 | 210,758.88 | 3,718,248.23 |
| வருடத்தினுள் மாற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - |
| **31.12.2013 இன் மீதி** | 10,930,715.53 | 141,400.09 | 198,676.55 | 5,632.30 | 1,176,964.62 | 258,290.58 | 210,758.88 | 12,922,438.54 |
| | | | | | | | | |
| **31.12.2013 தேறிய பெறுமதி** | 4,770,854.47 | 2,859,627.18 | 596,029.65 | 170,840.70 | 2,037,875.38 | 1,873,775.42 | 1,585,404.63 | 13,894,407.43 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஜேபீ/ஏ/ஆர்ஈபீஜஏ/1/13/33 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2014 திசெம்பர் 18

தலைவர்,

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபை

**ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 8(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைத்தல் அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவு் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்கு இணங்க நிதி நிலைக்கூற்றின் மாதிரியின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் செல்லும் ஒழுங்குமுறையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் அது ஒழுங்கு முறையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இல் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டின் கணக்குகளுடன் காண்பிக்கப்பட்ட முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுத் தொகைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக விளக்கமளிக்கும் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சொத்துக்களை மீள் கணிப்பீடு செய்யும் போது ஒட்டு மொத்த சொத்து வகுப்புக்களையும் மீள் கணிப்பீடு செய்வதற்குப் பதிலாக தெரிவு செய்யப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதி மாத்திரம் மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீள் கணிப்பீடு செய்யப்படாத ரூபா 8,138,908 தொகையான சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபை மீளாய்வாண்டிற்கு முன்னர் நடாத்தப்பட்ட வாடகை கட்டிடமொன்றில் அறைகளை பிரிப்பதற்காக செய்யப்பட்ட மிகைக் கட்டண வடிவிலான ரூபா 1,522,660 தொகை நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியளவில் அதிகாரசபையின் அலுவலகம் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XIV ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக, ரூபா 460,863 தொகை அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்காக இணைந்த படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | செயல்நிமித்த உப கட்டு நிதி வழங்கும் ஆகக் கூடிய எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக 35 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 முதல் ரூபா 207,500 வரையான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒரு முற்பணத்தைத் தீர்ப்பதற்கு முன்னர் மேலும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பிரிவு | பதவியணியினர் பல்வேறு தரங்களுக்கு கடமைகளுக்காக திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 86,857 தொகை விசேட படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்று நிருபம் | சுற்றுநிரூப ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | உத்தியோகத்தருக்கு கடன் வழங்கும் போது ஆகக் கூடிய எல்லை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் அதிகார சபையின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையினை விஞ்சி இடர் கடன் செலத்தப்பட்டிருந்தது. |

(ஊ) 2011 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 43(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம்

சம்பள படி நிலைகளைச் செய்யும் போது எவரேனும் உத்தியோகத்தர் பெறும் சம்பளம் குறைவடையுமாயின் அதனை நீக்குவதற்காக வழங்கப்பட்ட சீராக்கல் படிகள் 2011 யூலை 01 ஆந் திகதி முதல் முழுமையாக நீக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் மூன்று உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஆண்டின் போது செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பணம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 98,625,564 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இழப்பீட்டுப் பிரிவினால் பேணப்படுகின்ற பதிவேட்டின் பிரகாரம் ரூபா 96,238,064 ஆனமையால் ரூபா 587,500 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.5 பெறவேண்டிய கணக்குகள்

2009 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளாகிய வாகனத்திற்காக காப்புறுதி நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 44,300 தொகையான இழப்பீட்டை அறவிடுவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

வாடகை அடிப்படையில் புதிய அலுவலகக் கட்டிடத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஆரம்ப வைப்பாக ரூபா 4,500,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுக் குழுவின் மதிப்பீட்டுச் சந்தர்ப்பத்தின் போது இவ்வாறான வைப்பொன்று வைக்க வேண்டியதற்கான எவ்வித இணக்கப்பாடுமின்றி அங்கீகாரமின்றி ஆரம்ப வைப்பு வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை ரூபா 7,418,327 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,283,016 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,701,343 தொகையான முன்னேற்றத்திற்காக அரசாங்கத்தின் மானியம் ரூபா 150,578,000 தொகை மற்றும் வட்டி வருமானமும் ஏனைய வருமானமும் ரூபா 1,483,270 தொகை அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரசபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக நிர்க்கதிக்குள்ளானவர்களை புனரமைப்புச் செய்வதற்கு மூன்று கடன் செயற்திட்டத்தின் கீழ் நிதி நிறுவனங்களின் ஊடாக ரூபா 843,200,000 கடன் பணம் 6,317 நலனாளிகளுக்கு வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 1,216 நலனாளிகளுக்காக மாத்திரம் ரூபா 170,533,000 கடன் வழங்கப்பட்டமையினால் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் 20 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. கடன் செயற்திட்டங்களிலுள்ள பிரதான செயற்திட்டமான சுயதொழில் கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் ரூபா 745,000,000 தொகை 5,707 நலனாளிகளுக்கு கடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக 1,202 நலனாளிகளுக்காக ரூபா 167,233,000 கடன் வழங்கப்பட்டமையினால் 22 சதவீதமான குறைந்த செயல்முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் ஒன்றிணைந்த மானிய உதவித் திட்டத்தின் கீழ் கடன் வசதிகளை வழங்கும் நோக்கில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த தொகைக்கான உடன்படிக்கை கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும் அறவிடுவதற்கிருந்த ரூபா 123.2 மில்லியன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாட்டில் ஏற்பட்ட உள்ளக பிணக்குகளின் அடிப்படையில் சொத்துக்களை நாளதுவரையாக்குவதற்கும் சுயதொழிலுக்காகவும் 1983 ஆம் ஆண்டின் போது நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 76,631,093 தொகையான கடன் பணம் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியின் போது அதிகாரசபை அலுவலகத்தை புதிய வாடகைக் கட்டிடத்திற்கு கொண்டு செல்லும் போது மாதாந்த வாடகை ரூபா 750,000 தொகை வாடகை உரிமையாளருக்குச் செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் அது அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீடு ரூபா 700,000 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நிதியேற்பாடாக திறைசேரியிலிருந்து ரூபா 200,000,000 தொகை கிடைத்திருந்ததுடன் அப்பணத்திலிருந்து மரணமும் காயமும் மற்றும் சொத்து இழப்பீடு செலுத்துவதற்காக ரூபா 188,194,294 தொகை செலவிடப்பட்டிருந்தது. நலனாளிகளுக்காக காசோலை கையளிக்கும் விழாவிற்காக உணவுகளுக்கு ரூபா 1,383,769 தொகையும் பேருந்திற்காக போக்குவரத்துச் செலவினமாக ரூபா 1,698,820 தொகையும் செலவிடப்பட்டு

அவற்றையும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் இலக்கு மற்றும் நோக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் கூட்டிணைந்த திட்டம் 2012 – 2016 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது நாளதுவரையாகத் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

அதிகாரசபையினால் 2013 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையின் சகல கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) பாதீடு
(ஈ) வீடமைப்பு உதவிச் செயற்திட்டம்
(உ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ஆர்ஈபி/ஏயூடீடி/எப் /2013 26.08.2014

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் திணைக்களம்,
பத்தரமுல்ல.

**ஆட்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் 2013 டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்று தொடர்பாக 1971 இலக்கம் 38 உடைய நிதிச்சட்டத்தின் 14(2)(சீ) சரத்தின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கை**

மேற்படி விடயம் தொடர்பாக தங்களது ஜேபீ/ஏ/ரெப்பியா/1/13/33 மற்றும் 2014 ஆகஸ்ட் 15ம் திகதிய நகல் அறிக்கை சம்பந்தமான எனது கணிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2. நிதிக் கூற்று**

**2.2.1 இலங்கை கணக்காய்வு தர நிர்ணயம்**

(அ) மற்றும் (ஆ) எம்மால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குக் கூற்று சம்பந்தமாக இலங்கை அரச பிரிவின் கணக்காய்வுத் தரம் முதன்முறையாக 2013ம் வருடத்திலேயே பாவிக்கப்பட்டது. ஆதலால் நிதிக் கூற்று சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட படிவம் தொடர்பான குறைபாடுகளை 2014ம் ஆண்டுக்கான் இறுதிக் கணக்கு சமர்ப்பிக்கப்படும்போது சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.2.2 கணக்கின் குறைபாடுகள்**

(அ) அவதானிப்பு சரியானது. உரிய முறையில் நிலையான சொத்துக்களை மீள் மதீப்பிடு மதீப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்தோடு 2013 ம் ஆண்டிற்குரிய நிலையான சொத்துக்கள் மதீப்பீட்டில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை 2014ம் ஆண்டின் நிதிக் கூற்றில் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

(ஆ) 2014ம் ஆண்டின் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டு உரிய சரிசெய்தல் மேற்கொள்ளப்படும்.

**2.2.3 சமன் செய்யப்படாத நிர்வாகக் கணக்கு**

நிறுவனத்தின் ஒவ்வொரு நட்டஈட்டுப் பிரிவின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற நட்டஈட்டுக் கொடுப்பனவு அட்டவணைகளில் மாதாந்த நிலுவை, நிதிப் பிரிவினால் பராமரிக்கப்படுகின்ற செலவுப் பதிவேடுகளில் மாதாந்த நிலுவை மற்றும் மாத முடிவில் சமன் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்போது அவ் ஆவணங்களுக்குள், இடம்பெறுகின்ற நிலுவை முரண்பாடுகளை

நிவர்த்தி செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படும் 2013ம் வருடத்திற்குள் அவை சமன் செய்யப்பட்டுள்ளன.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(அ) முன் அலுவலக சூழல் நடாத்திச் சென்ற கட்டிட உரிமையாளரின் கடும் அழுத்தம் காரணமாக 2013 டிசம்பர் 31ம் திகதியளவில் அலுவலகத்தினை உரிய கட்டிடத்திலிருந்து நீக்க வேண்டி ஏற்பட்டது. அத்தோடு உரிய அறைகளாகப் பிரித்தல், திட்டமிடல் இதற்கு முன் அதிகாரசபையினால் கூலி அடிப்படையில் பெற்றுக் கொள்ள திட்டமிட்டிருந்த கட்டிடத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்ததோடு, அது புதிய சூழலுக்கேற்ற வகையில் சிறு மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டது. தலைவரின் முன் அனுமதியுடன் ஏற்பட்டதோடு, மிகவும் அத்தியாவசிய காரணங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது.

(ஆ) அவதானிப்பு சரியானது. முன்னர் அதிகாரசபை இயங்கிய கட்டிடத்தில் அறைகள் பிரிக்கப்படுவதற்காக பாவிக்கப்பட்ட பொருள்கள் தொடர்பான புதிய கட்டிடத்திற்கு பாவிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் பாவிக்கப்பட முடியாமல் போன மூலப்பொருள்கள் தொடர்பான அட்டவணையொன்று எதிர்காலத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றேன். அதுபோல் பாவனைக்குட்படுத்த முடியாத பொருட்களை பின்னால் இடம்பெறக்கூடிய வருட பொருள் மதிப்பீட்டு பரிசீலனை மூலம் தேவையற்ற பொருட்கள் என ஒதுக்க நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காதவை.**

(அ) வெளிக் கடமைகளில் ஈடுபடும் வேளைகளில் உணவு பானம் மற்றும் ஏனைய தங்குமிடங்களிற்காக முற்பணம் பெற்றுக்கொள்ளும் எந்த சந்தர்ப்பங்களிலும் பிரயாணக் கொடுப்பனவு பெறப்படவில்லை.

(ஆ) கடன் திட்டங்களுக்குரிய வெளிக்கள கடமைகளுக்காக மாத்திரம் ஏற்படும் கஷ்ட நிலமைகளை கவனத்திற்கொண்டு வழங்கப்படும் விஷேட கொடுப்பனவாகும். அங்கு அக்கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் சிபார்சின் கீழ் ஒரு மாதத்திற்கு ஆகக்கூடியது 5 தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு உரிய கடன் திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளும் 1% சேவைக் கட்டணம் உபயோகப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

(இ) அவதானிப்பு சரியானது. அதன்படி 2014 வருடத்திலிருந்து உரிய முறைப்படி நிலையான சொத்துக்களை கணக்கில் வைப்பதற்காக நிலையான சொத்துக்கள் அட்டவணை உரிய முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) 396 (ஈ) நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 609,433.00 க்கு காசோலை 09 தொடர்பாக இதுவரைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் காசோலை தொடர்பாக 396 (ஈ) நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) இங்கு கடன் தொகை உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது சுற்றறிக்கை விநியோகிப்பதற்கு முன்பாகும். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இல.30/2008 மற்றும் 2008 டிசம்பர் 31 திகதியுடைய அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு அனர்த்தக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஊ) முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 30/31 (1) ற்கேற்ப இவ்வதிகாரசபையின் சம்பளமானது உரிய முறையில் வழங்க தயாரிக்கப்பட்டுள்ளது. 2014 ஜூலை மாதத்திலிருந்து உரிய சமன் செய்யும் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.

**2.2.5 போதுமான அதிகாரங்களுடாக உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்**

பழைய கட்டிடத்திலிருந்து நீங்கும்போது அவ் அலுவலகத்தை தொடர்ந்தும் வைத்திருக்குமுகமாக அதன் உரிமையாளர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளதோடு, நடைமுறைச் சாத்தியமான முறையில் ஆரம்பத்தில் இவ்வைப்பு தொடர்பாக குறிப்பிடப்படாத, ஆனாலும் வேறொரு மார்க்கமுமின்றி இறுதியில் புதிய கட்டிடத்திற்கு செல்வதற்கு இவ்வைப்பு அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் அவசரமான மற்றும் அத்தியாவசியத் தேவை காரணமாக இது இடம்பெற்றது.

நீதி அறிவுரை பெற்றுக் கொள்வதற்காக போதுமான காலம் இல்லாத காரணத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியைப் பெற்றுள்ளதோடு, சட்டத்தரணியின் கட்டணமாக நாங்கள் செலுத்தியது நாம் கொடுக்க வேண்டியதன் அரைப்பகுதியாகும்.

இச்சகல நிர்மாணம் மற்றும் வழங்கல் போன்றன அதிகாரசபையின் தேவைக்கு அத்தியவாசியமானதாகும்.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறு**

அவதானிப்பு சரியானது

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயல்திறன்**

சுயதொழில் கடன் திட்டம் - 2013ம் வருடத்தினுள் 2031 பயனாளிகளுக்காக சிபார்சு வழங்கப்பட்டிருந்தபோதிலும் போதுமான முன்னேற்றம் இல்லாததை ஏற்றுக் கொள்வதோடு,

உரிய பிரச்சினை தொடர்பாக இலங்கை வங்கியுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டதுடன் அதனை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் வீடமைப்பு அதிகாரசபையுடன் ஒன்றிணைந்து வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக உரிய முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

சமூகமயப்படுத்தப்பட்ட பயிலுனர்களுக்கான சுயதொழில் கடன் திட்டத்தின் 2வது கட்டம் 2013ம் வருடத்தினுள் ஆரம்பிக்கப்படவிருந்தபோதிலும், அது தாமதமானதே உரிய முன்னேற்றம் குறைந்தமைக்கு காரணமாகும்.

அரச ஊழியர்களுக்கான நட்டஈட்டுத் திட்டத்தின் கீழ் 67.5% மான முன்னேற்றத்தை அடைந்துள்ளதோடு, ஆகக்கூடியதை அடைய முடியாமல் போனதிற்கான காரணம் பூரணப்படுத்தப்பட்ட கோவைகள் இல்லாத காரணத்தினாலாகும்.

திருமண சுபீட்சக் கொடுப்பனவுத் திட்டத்தில் இடம்பெற்ற விஷேட பிரச்சினை காரணமாக 2013ம் வருடத்தினுள் கொடுப்பனவை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டது.

**4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

(அ) அறவிட வேண்டிய ரூபா 44,300.00 தொகை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அவ்வாறு இல்லையாயின், சட்ட நடவடிக்கை மூலம் உரிய பணத்தை அறவிட நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

(ஆ) தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் அறவிட வேண்டிய நிதியை பெறுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(இ) நிதி நிறுவனங்களுடன் இக்கடன் திட்டத்தை அமுல் நடாத்தும்போது வழங்கப்படும் கடனின் தேவைக்கேற்ப அவ்வவ் காலப் பகுதிகளுக்காக மீள்சுழற்சி நிதியானது நிதி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இது இரு சாரார்களுக்கிடையில், செய்து கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தத்தின் சீ சரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். எதிர்காலத்தில் இந்நிலமையில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

(ஈ) இக்கடன் தொகையை நீக்குவதற்காக அமைச்சரவையின் அனுமதியானது கிடைக்கப் பெற்றுள்ளதோடு நி.பி.113 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள திறைசேரி செயலாளரின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) நிறுவனத்தில் ஏதாவது சேவை நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்காக நிறுவன ஊழியர்கள் சமர்ப்பிக்கப்படுமாயின், தாபனக் கோவை IX வது பந்தியில் 2.2 சரத்தின் பிரகாரம் கடமைக்கு இடையூறு ஏற்படாமலும் அலுவலக நேரம் தவிர்ந்த வேளையிலும் வெளியே செய்யக்கூடிய சாதாரண கடமைகள் அல்லாமலும் கிடைக்கப் பெறும் முழுக் கட்டணமும் உத்தியோகத்தரின் தேவைக்கு பெற்றுக் கொள்ள இடமளிக்க முடியும். அத்தோடு அக்கடமைக்காக நலன்புரிச் சங்கத்தினால் பெற்றுக் கொண்ட பணம் சந்தை விலை மதீப்பிட்டின் பிரகாரம் 10% க்கு கூடிய பெறுமதியுடன் அரசிற்கு சேமிப்புப் பெறுமதியாகும்.

(ஆ) அரச மதீப்பீட்டாளர்களின் மதீப்பீட்டு பெறுமானம் ரூ.700,000.00 ஆனாலும் சன நெருக்கடியான பொரள்ளை நகர மத்தியில் அமைந்துள்ள இக்கட்டிடத்தின் வணிகப் பெறுமதி (Commercial value) கூடிய பெறுமதியாக மதிக்கப்பட்டுள்ளது.

(இ) திறைசேரியினால் நட்டஈட்டுக்காக கிடைக்கப் பெற்ற நிதியினை நட்டஈட்டுக் கொடுப்பனவுக்காக ரூ.188,194,294.00 தொகையானது பயனாளிகளுக்காக காசோலை வழங்கும் வைபவத்தில், உணவிற்காக ரூ.1,383,769.00 மற்றும் போக்குவரத்து செலவாக ரூ.1,698,820.00 யான தொகையொன்றை செலவழிக்க ஏற்பட்டது ஜனாதிபதியின் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற நட்டஈடு வழங்கும் வைபவ செலவாகும். அது நட்டஈட்டுக்குரிய செலவினமாகும். எவ்வாறாயினும் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக அத்தியாவசிய செலவினங்களுக்காக செய்யப்படுகின்ற செலவு திறைசேரியிடம் மேலதிக நிதி ஒதுக்க கேட்டிருந்தபோதும், எவ்வித நிதிகளும் அவ்வருடத்தில் மேலதிகமாக கிடைக்கப் பெறவில்லை.

**4.4 காணக்கூடிய முறைகேடுகள்**

தற்போது இதுவரை நிதிப் பிரமாண 371 (2) இன் பிரகாரம் ஆகக்கூடிய எல்லை கடமையையும் விட முன்னேற்றகரமாக மேற்கொள்வதில் செயலில் அல்லாததால் தேவை மற்றும் ஆகக்குறைந்த நிதித் தேவைகள் தொடர்பாக அதிகாரசபை பணிப்பாளர் சபைக்கு அறிவித்ததன் பின்னர் அதன் சிபார்சின் கீழ் எல்லையை தாண்டியும் முற்பணம் பெற வேண்டி ஏற்பட்டது.

**4.5 ஊழியர் சேமலாப பணிக்கொடைக்காக நிதியமொன்றினை கட்டியெழுப்புதல்**

2013ம் ஆண்டில் திறைசேரியினால் பெற்ற நிதியானது போதாமையினால் 2013ம் ஆண்டில் முதலீடு செய்ய வேண்டிய முழுத் தொகையையும் முதலீடு செய்யப்படவில்லை. 2013ம் ஆண்டில் திறைசேரியிடமிருந்து இதற்கென மேலதிக நிதி கேட்டுக் கொண்டதோடு அதை கொடுப்பனவு செய்ய வேண்டியதாயினும், அச்சந்தர்ப்பத்தில் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என அறியத் தந்துள்ளது. எவ்வாறாயினும் 2014ம் ஆண்டில் முதல் பகுதியளவில் அதில் ரூ.1,500,000.00 ஆன நிதியொன்று முதலீடு செய்யப்பட்டது. இறுதித் தொகை 2014ம்

ஆண்டின் முடிவடையும்போது ஒதுக்கீடு பெற்றுக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தில் முதலீடு செய்ய ஆகக்கூடியளவு நடவடிக்கை மேற்கொள்கின்றேன்.

**5. கணக்கு நடவடிக்கைத்தரம் மற்றும் நல்லாட்சியும்**

**5.1 ஒன்றிணைந்த திட்டம்**

ஏதிர்காலத்தில் திறைசேரியினால் வருமானமீட்டாத பூரண அரச நிறுவனமல்லாத நிறுவனங்கள் இவ்வாறான ஒன்றிணைந்த திட்டம் தயாரிப்பது அவசியமற்றதென அறிவிக்கப்பட்டுள்ளது.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

வருட ஆரம்பத்தில் இதற்காக ஆகக்குறைந்தளவு நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளதால் கொள்வனவுத் திட்டமானது தயாரிக்கப்படவில்லை. அதற்கு காரணம் மட்டுப்படுத்தப்பட்ட சொத்துக்கள் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும் வருட இறுதியில் இதுவரை ஏற்பட்ட அத்தியாவசிய காரணங்களுக்காக பல்வேறு வருமானம் ஈட்டல் மூலம் பெற்ற நிதியினால் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் 2014ம் ஆண்டிலிருந்து ஒழுங்கான முறையில் இவ்வாறான திட்டங்களை தயாரிக்கின்றேன்.

**5.4 உள்ளக கணக்காய்வு**

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் பரிசீலனையின் கீழ் அதிகாரசபையின் சகல கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கும் பிரகாரம் உள்ளக கணக்காய்வானது அமுல்படுத்தப்படும்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

(அ) நிலையான சொத்துகளிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு நடைமுறைப்படுத்துவதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

(அ), (ஆ) மற்றும் (இ)

உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**ஈ.ஏ.சமரசிங்க**
தலைவர்,
புனர்வாழ்வு அதிகாரசபை.